அன்பை விளையச்செய்யவேண்டும். மற்ற எல்லா பற்றாசைகளையும் இரண்டாவது இடத்துக்குத் தள்ளவேண்டும். தேவ பார்வையில் மிக விலையேறப்பெற்றதாக உள்ளவைகளை நாமும் விலையேறப்பெற்றதாக எண்ணி நேசிப்போமாக. மற்றவைகளைக் காட்டிலும் இவைகள் நமக்கு அதிக நேர்த்தியாகத் தோன்றட்டும், இதனால் நாம் நம் பரலோகத்திலுள்ள பிதாவைப்போன்ற சாயலை அடைந்திருப்போம்.

___________

## R 5907

### *பூரண அழகு பொருந்திய ராஜா*

உந்தன் கண்கள் நிச்சயமாய் ராஜாவைக் கண்டுவிடும்
அவரன்பு சபிக்கப்பட்ட மரத்தின்மீதும் கண்டதுவே,
உன் குற்றமைத் தாங்கிடுவார்,
உனைப் பெயர்சொல்லியே அழைத்திடுவார்,
உந்தன் கண்கள் நிச்சயமாய் ராஜாவைக் கண்டிடுமே

உந்தன் கண்கள் நிச்சயமாய் ராஜாவைக் கண்டிடுமே
வல்லமையுள்ளவரை, அநேகருக்குக் கிரீடம் சூட்டியவரை
மெல்லிதான ஆடைதனை அணிவித்து மகிழ்ந்தவரை
தாம் ஜெயித்திட்ட ராஜ்ஜியத்தை சுதந்தரிக்க உத்தரவிடுவார்
உந்தன் கண்கள் நிச்சயமாய் ராஜாவைக் கண்டிடுமே

அழிவுக்குரிய கீதத்திலே அவர் அழகுஉனை நிலைநிறுத்தும்
பூரணமாய் அழகானவர் அவர் ஒருவர் மாத்திரமே
பிரமிப்பூட்டும் மகிமையினைக் காண இன்னும் கொஞ்சதூரம்
உந்தன் கண்கள் நிச்சயமாய் ராஜாவைக் கண்டுவிடும்

ஆம்! அடையுமிடம் வெகுதூரம்
என்றெண்ணி சோர்ந்திடாதே
காலடி தொலைவில்தான், ஒருகணமே,
உனக்கான போராட்டம் முடிவுக்குவந்திடுமே
பின்போ உன் துக்கமெலாம் சந்தோஷமாய் மாறிவிடும், இரவும்கூட பகலாய் மாறிவிடும்
உந்தன் கண்கள் நிச்சயமாய் ராஜாவைக் கண்டுவிடும்.

____________________

## R 5907

# பிலிப்பு பட்டணத்தின் சிறைஅதிகாரி
## THE PHILIPPIAN JAILER

**ஆதார வசனங்கள்** : அப்போஸ்தலர் 16:16–40

**திறவு வசனம்** : அப்போஸ்தலர் 16:31 "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் ... இரட்சிக்கப்படுவீர்கள்"

சுவிசேஷகர்களான அப்.பவுலும் சீலாவும் லீதியாளின் வீட்டில் இருந்து ஒவ்வொரு நாளும் பட்டண வாசலுக்கு வெளியே இருக்கும் தொழுதுகொள்ளும் இடத்திற்கு வரும்போது, பிலிப்பு பட்டணத்தாரால் அறிந்த குறி சொல்ல ஏவுகிற ஆவியைக் கொண்டிருந்த ஒரு இளம்பெண்ணை அடிக்கடி சந்திக்கநேர்ந்தது. அவள் ஒரு அடிமைப்பெண்ணாக இருந்ததோடு, விழுந்துபோன தூதர்களில் ஒரு அசுத்தஆவியினால் பிடிக்கப்பட்டவளாய் இருந்தாள். அந்த ஆவி அவள் மூலமாக குறிசொல்லுதல், எதிர்காலத்தைப்பற்றி முன்உரைத்தல், தொலைந்துபோன பொருள்களை கண்டுபிடித்தல் மற்றும் ஆவிகளோடு தொடர்பு கொள்ளுதல் போன்ற கிரியைகளை நடப்பித்துவந்தது. மேலும் அங்குள்ள எல்லா ஜனங்களால் அறியப்பட்டதோடு, மேற்சொன்ன கிரியைகள்மூலம் அவளுடைய எஜமான்களுக்கு அதிக அளவில் வருமானத்தை ஈட்டிக்கொடுத்துவந்தாள்.



PAUL'S SECOND MISSIONARY JOURNEY
(THE PHILIPPIAN JAILER)
Acts 16:16-40.
GOLDEN TEXT:—Believe on the Lord Jesus Christ, and thou shalt be saved, and thy house. Acts 16:31.

கர்த்தரோடு ஊழியத்தை செய்யும்பொருட்டு அநேக நாட்கள் லீதியாளின் வீட்டிலிருந்து அப்.பவுலும் உடன் ஊழியக்காரரும் போக்கும்வரத்துமாக இருந்தபோது, அந்த அடிமைப்பெண், "இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர் இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்டாள்" – அப்16:17. இங்கு அசுத்தஆவிகளே அப்.பவுல் மற்றும் உடன் ஊழியக்காரரையும் அறிந்திருந்தார்களேயன்றி, நிச்சயமாகவே அந்த பெண் அவர்களைஅறிந்திருக்க வாய்ப்பு இல்லை. அந்தஅசுத்தஆவிகள் எந்தஅளவிற்கு நடக்கப்போகும் நிகழ்வுகளை முன்உரைத்திருக்குமென்று நாம் முழுமையாக அறியாவிடினும், முன்கூட்டியே அவர்கள் யூகித்திருந்தபடி அவைகள் நடைபெற்றிருக்கலாம். எவ்வாறெனில் அப்போஸ்தலர் அந்த அசுத்தஆவியை துரத்திவிடுவர் எனவும், அதன் விளைவக அப்பெண்ணின் எஜமானர்கள் மற்றும் நண்பர்களால் கர்த்தருடைய ஊழியக்காரர்களும், அவர்களால் மனம் மாற்றப்பட்டவர்களும் கடுமையாக கட்டுக்கடங்காத கோபத்துடனும், வெறியுடனும் தாக்கப்படுவார்கள் என முன்கூட்டியே யூகித்திருந்தார்கள் என நாம் நம்பலாம்.

அப்போஸ்தலரால் அப்பெண்ணிடமிருந்து அந்தஅசுத்தஆவியை வெளியே வர கட்டளையிட முடியும் என்பதை கருத்தில் கொள்ளாமல் நேரடியாகவே "அவர்கள் உன்னதமான ஊழியக்காரர்" என அந்த அசுத்த ஆவியால் சொல்லியிருக்கலாம். இருந்தபோதிலும் அப்படிப்பட்ட புகழ்ந்துபேசப்படும் சாட்சியினிமித்தம் அப்போஸ்தலர் மகிழ்வடைந்து அந்தஅசுத்தஆவியை துரத்தாமல் இருப்பார் என்று எதிர்பார்த்திருக்கக்கூடும். ஆனால் நாம் வாசிக்கிறபடி அநேகநாள் இப்படிப்பட்ட சாட்சி கொடுக்கப்பட்டு வந்ததினால் பரிசுத்தபவுல் கடும் கோபமடைந்தார். கொடுக்கப்பட்டசாட்சி சத்தியமாய் இருந்ததினால் அவர் சினமடையாமல், சத்தியம் வரக்கூடாத நபர்களிடமிருந்து வந்ததால்அவர் சினமடைந்தார். ஏனெனில் அசுத்தஆவி ஒருபோதும் சத்தியத்தை மதிப்பதில்லை என்று அறிந்திருந்தார். விழுந்துபோன தூதர்களில் யாராவது தேவனையும் அவருடைய நீதியின் கொள்கைகளையும்